RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-47 | 19 பிப்ரவரி | புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## எல்லீஸ்புரம் குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை இடிக்க முயற்சி அண்ணா சாலையில் பொதுமக்கள் திரண்டு மறியல்

சென்னை, பிப்.19

சென்னை அண்ணா சாலை அருகே எல்லீஸ் சாலையில் உள்ளது எல்லீஸ்புரம். இங்குள்ள வீடுகள் மிகவும் பழுதாகிவிட்டதால் அவற்றை இடிக்க தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அதிகாரிகளும், பணியாளர்களும் நேற்று வந்தனர். வீடுகளை இடிக்க அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அதையும் மீறி வீடுகளை இடிக்க முற்பட்டபோது ஆத்திரமடைந்த மக்கள் அண்ணா சாலையில் மறியலில் ஈடுபட்டனர். சம்பவ இடத்துக்கு வந்த போலீஸாரும், அதிகாரிகளும் சமரசம் பேசியதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்.



இதுகுறித்து எல்லீஸ்புரம் பகுதி மக்கள் தெரிவித்ததாவது: எல்லீஸ்புரத்தில் உள்ள வீடுகள் மிகவும் பழுதாகி, வசிப்பதற்கு தகுதியற்றதாக இருப்பதால் வீடுகளைக் காலி செய்யும்படி தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் நோட்டீஸ் அனுப்பியது. 65 ஆண்டுகளாக இங்கு வசிக்கிறோம். எங்களின் வாழ்வாதாரம் இங்கு இருப்பதால், எங்களுக்கும் எங்களின் குடும்பத்தினருக்கும் மட்டுமே வீடுகளை ஒதுக்க வேண்டும்.

வெளி நபர்களுக்கு இங்கு வீட்டை ஒதுக்கக்கூடாது. புதிதாக வீடுகளைக் கட்டி கட்சிக்காரர்களுக்கு கொடுத்துவிடுவார்கள் என்ற அச்சம் காரணமாகவே எதிர்க்கிறோம். மழை பெய்தால் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்துவிடுகிறது. பெரும் சுகாதாரக் கேடு உள்ளது. இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி எந்தப் பலனும் இல்லை. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தரப்பில் கூறப்படுவதாவது: எல்லீஸ்புரத்தில் காமராஜர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்பில் 40 வீடுகளும், கருணாநிதி ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட குடியிருப்பில் 32 வீடுகளும் உள்ளன. இங்குள்ள வீடுகள் மிகவும் பழுதாகி வசிப்பதற்கு தகுதியற்றதாக உள்ளன.

அதனால் வீடுகளை இடித்து புதிய குடியிருப்புகளை கட்டிக் கொடுக்க வாரியம் திட்டமிட்டுள்ளது. வீடுகளை காலி செய்யும்படி 4 முறை நோட்டீஸ் வழங்கியும் மக்கள் வீடுகளைக் காலி செய்யவில்லை. காலி செய்தவர்களின் வீடுகளில் உள்ள கதவுகள், ஜன்னல்களை அப்புறப்படுத்த சென்றபோது மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பழைய குடியிருப்புகளையும், எல்லீஸ் சாலையோரத்தில் உள்ள கடைகளையும் இடித்துவிட்டு புதிதாக அடுக்குமாடிக் குடியிருப்புகளும் கடைகளும் கட்டித் தர வாரியம் திட்டமிட்டுள்ளது. மக்கள் ஒத்துழைப்புக் கொடுத்தால் விரைவாக பணியைத் தொடங்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## ஆவணம் இல்லாமல் அமெரிக்காவில் தங்கியிருக்கும் 7.25 லட்சம் இந்தியர்கள் எதிர்கொண்டிருக்கும் நாடு கடத்தல் நடவடிக்கை

நியூயார்க், பிப்.19

அமெரிக்க அதிபராக டொனால்டுடிரம்ப் இரண்டாவது முறையாகப் பதவியேற்றிருக்கும் நிலையில், அந்நாட்டுக்குப் பிரதமர் மோடி மேற்கொண்ட இரண்டு நாள் பயணம் பல முக்கிய நகர்வுகளுக்கு வழிவகுத்திருக்கிறது. எரிசக்தி, அணுசக்தி ஒத்துழைப்பு, பாதுகாப்பு எனப் பல்வேறு விவகாரங்களில் இரு தலைவர்களுக்கும் இடையே ஆக்கபூர்வமான உரையாடல் நிகழ்ந்தது.



மும்பை பயங்கரவாதத் தாக்குதலில் தொடர்புடைய தஹாவூர் ராணாவை இந்தியாவிடம் ஒப்படைக்க டிரம்ப் ஒப்புக்கொண்டது இந்தப் பயணத்தின் மைல்கல். எனினும், வரி விதிப்பு முதல் சட்டவிரோதக் குடியேறிகள் வரை பல்வேறு விவகாரங்களில் டிரம்ப் காட்டிய கெடுபிடியை முன்னிறுத்தி, அதை மோடிக்கு எதிரான விமர்சனமாக மாற்றும் முயற்சிகள் நடக்கின்றன.

தனது முந்தைய ஆட்சிக் காலத்தின்போது சீனாவுடன் வர்த்தகப் போரில் ஈடுபட்டிருந்த டிரம்ப், இந்த முறை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முதல் இந்தியா வரை பல நாடுகளுக்குமானதாக அதை விஸ்தரித்திருக்கிறார். இறக்குமதிக்கு அதிக வரி விதிப்பதன் மூலம் பிற நாடுகளுடனான வர்த்தகத்தில் சமநிலையை ஏற்படுத்த முடியும் எனக் கருதுகிறார்.

'வரிவிதிப்பு மன்னன்' என்கிற அளவுக்கு இந்தியாவைப் பகிரங்கமாக விமர்சிக்கும் டிரம்ப், பரஸ்பர வரி விதிப்பு என்னும் பெயரில் பதிலடி வரி விதிப்பை முன்னெடுக்கிறார். அமெரிக்காவிலிருந்து இந்தியா இறக்குமதி செய்வதைவிடவும், அந்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதுதான் அதிகம். இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த டிரம்ப் முனைகிறார்.

முன்னதாக, பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு உச்சி மாநாட்டின் கூட்டறிக்கையில், பிரான்ஸ், இந்தியா, சீனா உள்ளிட்ட 61 நாடுகள் கையெழுத்திட்டிருந்த நிலையில், அமெரிக்காவும் பிரிட்டனும் அதில் கையெழுத்திடாமல் தவிர்த்துவிட்டன. ஏ.ஐ. தொழில்நுட்பச் சந்தையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதை அமெரிக்கா விரும்பவில்லை என்பதும் வெளிப்படை. இப்படியான சூழலில், நடைமுறை சார்ந்த அணுகுமுறை அவசியம் என்பதைப் பிரதமர் மோடி உணர்ந்துகொண்டிருக்கிறார்.

இந்தப் பயணத்தின்போது கையெழுத்தான அமெரிக்கா இந்தியா இடையிலான 10 ஆண்டுகளுக்கான பாதுகாப்பு ஒப்பந்தம் குறிப்பிடத்தக்கது. அதேவேளையில், எஃப் 35 ரக ஜெட் விமானங்களை இந்தியாவுக்கு வலுக்கட்டாயமாக அமெரிக்கா வழங்குவது குறித்து விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. இந்த விமானங்கள் குறைபாடு கொண்டவை என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இது ஒரு முன்மொழிவு மட்டுமே; ராணுவத் தளவாடங்கள் கொள்முதலில் இந்தியாவுக்கு என்று வழிமுறைகள் இருக்கின்றன என வெளியுறவுத் துறைச் செயலர் விக்ரம் மிஸ்ரி விளக்கம் அளித்திருக்கிறார்.

ரஷ்யாவிடம் இருந்து சகாய விலையில் எண்ணெய், எரிவாயு இறக்குமதி செய்துவரும் இந்தியா, இனி அமெரிக்காவிடம் இருந்து அவற்றை இறக்குமதி செய்ய வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது. அதிகத் தொலைவிலிருந்து கொண்டுவர வேண்டியிருப்பதால், அவற்றின் விலை ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும் என்றே கணிக்கப்படுகிறது.

அதேபோல், முறையான ஆவணம் இல்லாமல் அமெரிக்காவில் தங்கியிருக்கும் 7.25 லட்சம் இந்தியர்கள் எதிர்கொண்டிருக்கும் நாடு கடத்தல் நடவடிக்கை இந்தியாவில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதையும் இந்தியா உரிய ராஜதந்திர ரீதியில் கையாள வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளும் எழுந்துள்ளன.

டிரம்ப்பின் புதிய அணுகுமுறைகள் பல்வேறு நாடுகளின் வணிகத்தில் மட்டுமல்லாமல், உள்விவகாரங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. உண்மையில், அவசர கதியில் டிரம்ப் முன்னெடுக்கும் இந்த வரிவிதிப்பு காலப்போக்கில் அமெரிக்காவுக்கே பின்னடைவை ஏற்படுத்தக்கூடும் என்றும் பேசப்படுகிறது.

கூடவே, இவ்விஷயத்தில் கனடா போன்ற நாடுகள் தங்கள் இசைவின்மையை அமெரிக்காவுக்கு உணர்த்தியிருக்கின்றன. ஆனால், இந்தியா இதை மிகக் கவனமாகவே அணுகுகிறது. டிரம்ப்புடனான சந்திப்புக்குப் பின்னர், இந்தியாவில் நிர்வாகத்தின் அனைத்துத் துறைகளிலும் அரசின் பங்கை மேலும் குறைப்பது, வணிகம் செய்வதற்கான வழிமுறைகளை எளிதாக்குவது என அடுத்தடுத்த நகர்வுகள் பிரதமர் மோடியால் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தியாவின் எதிர்காலத்தை மனதில் கொண்டு மிகுந்த கவனத்துடன் இத்தகைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்!

## தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ்குமார் நியமனம்! காங்கிரஸ் கடும் கண்டனம்

புதுடெல்லி, பிப்.19

இந்தியதலைமைத்தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமாரை நியமிப்பது குறித்த மத்திய அரசின் அறிவிப்பு 'அவசரமாக எடுக்கப்பட்ட முடிவு' என காங்கிரஸ் கட்சி விமர்சித்துள்ளது. மேலும், தேர்தல் ஆணையரை பரிந்துரைக்கும் குழு குறித்த உச்சநீதிமன்றத்தின் விசாரணையைத் தவிர்க்கவே பாஜக தலைமையிலான அரசு ஆர்வமாக இருப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.



இதுகுறித்து காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால் திங்கள்கிழமை நள்ளிரவில் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "நள்ளிரவில் அவசர அவசரமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையால், புதிய தலைமைத் தேர்தல் ஆணையரை மத்திய அரசு அறிவித்துள்ளது. இது நமது அரசியலமைப்பின் புனிதத்துக்கு எதிரானது. மேலும், தேர்தல் நடைமுறை புனிதமானதாக இருக்க, தலைமைத் தேர்தல் ஆணையர் பாரபட்சமற்றவராக இருக்க வேண்டும் என பல வழக்குகளில் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

திருத்தப்பட்ட சட்டத்தின் படி, தலைமைத் தேர்தல் ஆணையரை நியமனம் செய்யும் குழுவிலிருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி நீக்கப்பட்டுள்ளார். தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு, பிப்.19ம் தேதி (புதன்கிழமை) உச்சநீதிமன்ற விசாரணை வரைக்கும் மத்திய அரசு காத்திருக்க வேண்டும்.

அவசரமாக கூட்டத்தை நடத்தி, தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்க அவர்கள் எடுத்த முடிவு, உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு முன்பாக தேர்தல் நியமனத்தை செய்து முடித்துவிட வேண்டும் என்பதில் அவர்கள் ஆர்வமாக இருப்பதையே காட்டுகிறது.

இத்தகைய மோசமான நடத்தைகள், ஆளும் கட்சி எவ்வாறு தேர்தல் நடைமுறைகளை சீர்குலைத்தும், அவர்களின் வசதிக்கு ஏற்ப விதிகளை மாற்றுகிறது என்று பல முறை எழுப்பப்பட்ட சந்தேகங்களை உறுதிசெய்வதாகவும் உள்ளது. அது போலிவாக்காளர்கள் பட்டியலாக இருந்தாலும் சரி, பாஜகவுக்கு ஆதரவான தேர்தல் அட்டவணை அறிவிப்பாக இருந்தாலும் சரி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் ஹேக் செய்யப்பட்டது குறித்த கவலையாக இருந்தாலும் சரி மத்திய அரசும், அதனால் நியமிக்கப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையரும் தீவிரமான சந்தேகத்துக்கு உள்ளாகிறார்கள்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சரியாக சுட்டிக்காட்டியது போல, நமது அரசியலமைப்பின் படி, இந்த பிரச்சினையில் உச்சநீதிமன்றம் முடிவெடுக்கும் வரை மத்திய அரசு காத்திருக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

தலைமை தேர்தல் ஆணையர் அறிவிப்பு: முன்னதாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பிரதமர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில், தலைமை தேர்தல் ஆணையராக ஞானேஷ் குமாரின் பெயர் பரிந்துரைக்கப்பட்ட சில மணி நேரத்துக்கு பின்பு, தலைமைத் தேர்தல் ஆணையராக அவரை நியமனம் செய்யும் உத்தரவு வெளியானது. என்றாலும் இதற்கு தேர்வு குழுவின் ஒரு உறுப்பினரான மக்களவைத் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தலை ஆணையரை நியமிக்கும் குழு தொடர்பான வழக்கு விசாரணை இன்று (பிப்.19) நடைபெற இருப்பதால் இந்த கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் எதிர்ப்புக் குறிப்பு எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷாவும் கலந்து கொண்டார்.

கடந்த 2019ம் ஆண்டு ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்த்து ரத்து செய்யப்பட்டபோது ஞானேஷ் குமார் அங்குள்ள உள்துறை அலுவலகத்தில் பணியாற்றினார். 2024ம் ஆண்டு அவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார்.

## இந்திய மாநகராட்சிகளில் சென்னை முன்மாதிரியாக திகழ்கிறது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, பிப்.19

இந்திய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக தமிழகம் எப்படி இருக்கிறதோ அதுபோலத்தான் இந்தியாவில் உள்ள மாநகராட்சிகளுக்கெல்லாம் சென்னை மாநகராட்சி முன்மாதிரியாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.



சென்னை மாநகராட்சியில் நேற்று நடைபெற்ற விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னைக் குடிநீர் வாரியம், சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் சார்பில் ரூ.1,893 கோடியில் முடிவுற்ற 28 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 87 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

கடந்த 50 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி அடைந்துள்ள வளர்ச்சியை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. அந்தளவுக்கு மிகப்பெரிய வளர்ச்சியடைந்திருக்கிறது. சென்னை மாநகராட்சி வளர்ச்சியை திமுக அரசின் பங்களிப்பை தவிர்த்துவிட்டு எழுத முடியாது. சென்னை மாநகராட்சி மீது கருணாநிதிக்கு எந்தளவுக்கு பாசமும் நெருக்கமும் இருந்ததற்கு ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அண்ணா பரிசளித்த மோதிரம்: செய்தியாளர்கள் சந்திப்பின்போது கருணாநிதியிடம், "உங்கள் வாழ்க்கையில் நீங்கள் பெற்ற பரிசுகளில் மிகப் பெருமையாக எதைக் கருதுகிறீர்கள்" என கேள்வி கேட்டுள்ளனர். அதற்கு, "1959ம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சி தேர்தலில் திமுக நிச்சயம் வெற்றிபெறும் என்று அண்ணாவிடம் வாக்குறுதி அளித்து, அதன்படி வெற்றியும் பெற்று முதன்முதலில் திமுக சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு வருவதற்கு பணியாற்றியதற்காக சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், என்னைப் பாராட்டி அண்ணா ஒரு மோதிரம் அணிவித்தார்.

அந்தப் பரிசை இப்போது நினைத்தாலும் எனக்கு கண்ணீர் வரும். அந்தக் கூட்டத்தில் அண்ணா என்னைப் பாராட்டிப் பேசியதை என் வாழ்நாள் முழுவதும் மறக்கமாட்டேன்" என்று கருணாநிதி உணர்வுப்பூர்வமாகப் பதில் அளித்துள்ளார்.


மாணவர்களுக்கு ஏராளமான திட்டங்களை தந்து கொண்டிருப்பதால் தமிழகத்தில் எந்தப் பகுதிக்கு முதல்வர் சென்றாலும் அவரை மாணவர்கள் அப்பா என அன்போடு அழைக்கிறார்கள். தந்தையாக இருந்து முதல்வர் நிறைய திட்டங்களை செயல்படுத்துவார். உங்கள் சகோதரனாக நானும் என்றும் துணைநிற்பேன். இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

முன்னதாக மேயர் பிரியா வரவேற்றார். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமை உரையாற்றினார். நிறைவில், மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் நன்றி கூறினார்.

## மார்ச் 14ல் தமிழக பட்ஜெட்! சபாநாயகர் அறிவிப்பு!

சென்னை, பிப்.19

சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு செய்தியாளர்களை சந்தித்தார்.



அப்போது பேசிய அவர், 2025 26 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மார்ச் 14ஆம் தேதி காலை 9.30 மணிக்கு தாக்கல் செய்யப்படும் என தெரிவித்தார். தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்வார் எனவும் சபாநாயகர் அப்பாவு கூறினார்.

மார்ச் 15ஆம் தேதி வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என்றும் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் தாக்கல் செய்ய உள்ளதாகவும் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். மேலும் பேரவை கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடக்கும் என்பது அலுவலக ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும் எனவும் அப்பாவு கூறினார்.

## தமிழக வெற்றிக் கழகம் கட்சியுடன் இணைந்த தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சி

சென்னை, பிப்.19



தமிழக வெற்றிக் கழகம் கட்சியுடன் முதல் கட்சியாக தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது. தமிழக வெற்றி கழகத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ள தமிழ்நாடு முஸ்லிம் லீக் தலைவர் முஸ்தபா 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கூட்டணியில் இணையும் என்றும் அறிவித்துள்ளார்.

மேலும் தவெக கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்தது ஏன் என்றும் தமிழ்நாடு முஸ்லிம் லிக் கட்சியின் தலைவர் முஸ்தபா விளக்கம் அளித்துள்ளார். இதுதொடர்பாக பேசிய அவர், திமுக தொடர்ந்து இஸ்லாமிய மக்களை ஏமாற்றி வருவதாக குற்றம்சாட்டினார். தமிழக வெற்றி கழகம் கட்சிக்கு எதிராக இஸ்லாமியர்களை திசை திருப்பும் திமுகவின் சித்து விளையாட்டு எடுபடாது என்றும் முஸ்தபா தெரிவித்தார்.

வாக்கு வங்கிக்காக சிலர் மூலம் இஸ்லாமியர்களை திசை திருப்ப திமுக சதி செய்வதாகவும் குற்றம்சாட்டினார். இஸ்லாமிய மக்களின் பக்கம் நின்றவர் விஜய் என்றும் தனது கட்சியில் இஸ்லாமியர்களுக்கு அங்கீகாரம் கொடுத்தவர் விஜய் என்றும் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து தவெகவுடன் சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி என்று அறிவித்துள்ள முஸ்தபா திமுக மீது சரமாரி குற்றச்சாட்டுக்களை கூறியுள்ளார்.

இதனிடையே தமிழ்நாடு முஸ்லிம் லீக் கட்சி தவெகவுடன் கூட்டணி அறிவித்திருப்பது அக்கட்சிக்கு சாதகமான ஒன்றுதான் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்து வருகின்றனர்.



தேனி மாவட்ட ஆட்சியகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான கவிதை,கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் வழங்கினார்கள்.



இந்திய தடகள கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற 38 வது தேசிய அளவிலான தடகள போட்டியில் திருப்பூர் மாவட்டத்தை சேர்ந்த வீராங்கனை எஸ்.கே. ஸ்ரீ வர்த்தினி 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டு இரண்டாம் இடம் பிடித்து வெள்ளி பதக்கம் பெற்று திருப்பூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். மாணவி வெற்றி பெற்றமைக்காக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் நேரில் சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றார்.

# பெரியகுளம் அருகே கைலாசநாதர் மலைக்கோயிலில் விமான பாலாலய பூஜை



பெரியகுளம், பிப்.19

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே கைலாசபட்டியில் இந்து அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு கைலாசநாதர் மலைக்கோயிலில் ஹோமம், யாகம் செய்து விமான பாலாலயம் சிறப்பு பூஜையுடன் தீபாராதனைகளும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் இந்து அறநிலைய துறை செயல் அலுவலர் சுந்தரி, ஆய்வாளர் தனலட்சுமி, சபதி, ஜெயராம் மற்றும் அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழு சிறப்பு கௌரவ ஆலோசகர் ஜெயபிரதீப், தலைவர் நாராயணன், செயலாளர் சிவகுமார், பொருளாளர் விஜயராணி மற்றும் அன்பர் பணி செய்யும் குழு உறுப்பினர்கள் ஏற்பாடுகள் செய்திருந்தனர். கோயிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# பரமக்குடி அருகே உள்ள பெருங்கரை கிராமத்தில் மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டி




பரமக்குடி பிப்19

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி அருகே உள்ள பெருங்கரை கிராமத்தில் பரமக்குடி வட்ட உதவி வேளாண் இயக்குநர் மனோகரன் மற்றும் வேளாண் இணை இயக்குநர் முருகேசன் தலைமையில் நடைபெற்ற மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியின் அறுவடையில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். மேலும், ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் முன்னோட்டமாக செம்மை நெல் சாகுபடி செயல்முறை பயிற்சி பெற்றனர்.

# திருப்பூரில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிய ஆட்சியர்

திருப்பூர் பிப்.19

திருப்பூர் மாவட்டத்தில் நடந்த மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூபாய் 9,855/மதிப்பீட்டில் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகளையும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஒரு பயனாளிகளுக்கு 35 ஆயிரம் இயற்கை மரண உதவித்தொகையினை மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் வழங்கினார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் தலைமையில் நேற்று நடைபெற்றது. ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமைகளில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெறப்பட்டு அவை அனைத்து தொடர்புடைய துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய தீர்வு காணப்பட்டு வருகிறது.






அந்த வகையில் நேற்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா மற்றும் முதியோர் உதவித்தொகை புதிய குடும்ப அட்டை வேண்டியும் சாலை வசதி குடிநீர் வசதி வேண்டியும் என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 350 manical பெற்றுக் கொண்டவுடன் மனதாரர்கள் முன்னிலையில் விசாரணை செய்து அதன் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூபாய் 9,855/மதிப்பீட்டில் இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகளையும் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் ஒரு பயனாளிகளுக்கு 35 ஆயிரம் இயற்கை மரண உதவித்தொகையினை மாவட்ட ஆட்சியர் கிறிஸ்து ராஜ் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன், திட்ட இயக்குனர் (மகளிர் இயக்குனர் )சாம் சாந்த குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மாகராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், தனித் துணி ஆட்சியர் (சமூகப்பாது காப்பு திட்டம்) குமாரராஜா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் செல்வி, மாவட்ட ஆதி திராவிட நலத்துறை அலுவலர் புஷ்பா தேவி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் வசந்த ராம் குமார், துணை ஆட்சியர்கள் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மது போதை மறுவாழ்வு மையங்கள் சார்பில் விழிப்புணர்வை ஏற்படுத்திய பாட்டல் ராதா படகுழுவினருக்கு பாராட்டு

சென்னை பிப் 19

சென்னை கோயம்பேடு அரும்பாக்கத்தில் உள்ள விஜய் பார்க் ஓட்டலில் தமிழ்நாடு மது போதை மறுவாழ்வு மையங்கள் சங்கத்தின் சார்பில் பாட்டல் ராதா படகுழுவினருக்கு பாராட்டு விழா வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

மதுப்பழக்கம் மற்றும் போதை பொருள் பயன்பாடு குறித்து சமூக விழிப்புணர்வை ஏற்படுத்திய அழகான படைப்பை உருவாக்கிய பாட்டல் ராதா

திரைபடக்குழுவினரை கவுவுரவிக்கும் வகையில் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. பாராட்டு விழாவிற்கு தமிழ்நாடு மது போதை மறுவாழ்வு மையத்தின் தலைவர் சீமான் தலைமை தாங்கினார்.

பாராட்டு விழாவில் பாட்டில் ராதா திரைப்படத்தின் எழுத்தாளர் மற்றும் இயக்குனர் தினகரன் சிவலிங்கம், கலை இயக்குனர் ராஜா, ஒளிபதிவாளர் ரூபேஷ் ஷாஜி மற்றும் துணை நடிகர்கள் அன்பரசி, அனிஷா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




பாராட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக ஐயங்கரன் ஆராய்ச்சி மையத்தின் நிறுவனர் எம்.எஸ். ஐயங்கரன், தமிழ்நாடு மது போதை மறுவாழ்வு மையங்களின் தலைவர் சீமான் தமிழ் வேந்தன், மாநில செயலாளர் பீனிக்ஸ் பாரி, மாநில பொருளாளர் லயன் டாக்டர் எஸ். முருகன் ஆகியோர் சிறந்த திரைப்படத்தை உருவாக்கிய பட குழுவினருக்கு விருதுகள் வழங்கி கவுரவித்தனர்.

விழாவில் கலந்து கொண்ட பாட்டில் ராதா திரைப்பட இயக்குனர் தினகரன் சிவலிங்கம் கூறும்போது, இந்தத் திரைப்படத்தை எடுக்கும்போது போதை மறுவாழ்வு மையத்தில் நடக்கும் சில தவறுகளை சுட்டி காட்டி இருந்ததால் இந்த திரைப்படம் திரைக்கு வந்தால் போதை மறுவாழ்வு மையத்தினர் பிரச்சனை செய்வார்கள் என்று எதிர்பார்த்தேன் ஆனால் தற்போது எதார்த்தத்தை புரிந்து கொண்டு தமிழ்நாடு போதை மறுவாழ்வு மையங்கள் சார்பில் பாராட்டு விழா நடத்தியது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இந்த படம் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய வெற்றியை ஈட்டவில்லை என்றாலும், இது போன்ற பாராட்டு விழாக்களே மிகப்பெரிய வெற்றியாக உணருகின்றேன் என்றார்.

தமிழ்நாடு மது போதை மறுவாழ்வு மையத்தின் ஆலோசனை குழு உறுப்பினர்கள் திருப்பூர் பிரபு, டாக்டர் ரிச்சர்ட், டாக்டர் ஜான் செல்வ குமார், டாக்டர் குமார், டாக்டர் பிரசாத் மற்றும் கோகுல கிருஷ்ணன் மற்றும் சங்கத்தின் உறுப்பினர்கள் என ஏராள மானோர் கலந்து கொண்டனர்.

# பச்சை பட்டாணி முறைகேடு வழக்குத் தொடர்பாக சுங்கத் துறை கூடுதல் ஆணையர் உள்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்

சென்னை பிப்19

இந்தியாவில் கொல்கத்தா துறைமுகத்தின் வழியாக மட்டுமே பச்சை பட்டாணி இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்கான உத்தரவை மத்திய அரசு ஏற்கெனவே பிறப்பித்துள்ளது. பச்சை பட்டாணி இறக்குமதியைக் கண்காணிக்கும் வகையிலும், இறக்குமதியால் உள்ளூர் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையிலும் இந்த நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது. தற்போது பச்சை பட்டாணி வெளிநாடுகளில் இருந்து கிலோ ரூ.200க்கு இறக்குமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில்,சென்னை வழியாக இறக்குமதி செய்யப்பட்ட பச்சை பட்டாணி இறக்குமதியில் பெரும் முறைகேடு நடைபெறுவதாக மத்திய வருவாய் புலனாய்வு பிரிவுக்கு புகார்கள் வந்தன. அதன் அடிப்படையில் வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இது தொடர்பாக பச்சை பட்டாணி இறக்குமதியில் ஈடுபடும் புதுதில்லியைச் சேர்ந்த ஒரு தொழிலதிபருக்கு சொந்தமான இடங்களில் அண்மையில் சோதனை நடத்தப்பட்டது. அதில், பல முக்கிய ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டன.



இது தொடர்பாக, வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நடத்திய தீவிர விசாரணையில், அந்தத் தொழிலதிபர் பச்சை பட்டாணியை மசூர் பருப்பு என்று சென்னை துறைமுகம் வழியாக இறக்குமதி செய்வதும், இவ்வாறு பச்சை பட்டாணியை முறைகேடு செய்து இறக்குமதி செய்வதற்கு சென்னையைச் சேர்ந்த சில சுங்கத் துறை அதிகாரிகள் துணையாக இருப்பதும் தெரியவந்தது.

மேலும், வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு மசூர் பருப்பு இறக்குமதி செய்வதற்கு சில வரிச் சலுகைகள் இருப்பதைப் பயன்படுத்தி, இந்த முறைகேடு நடைபெறுவதும் விசாரணையில் தெரியவந்தது. இதில், தொடர்புடைய சுங்கத் துறை அதிகாரிகளின் சென்னை வீடுகளில் அண்மையில் அதிகாரிகள் திடீர் சோதனை செய்தனர். பல மணி நேரம் நடைபெற்ற இந்தச் சோதனையில் வழக்குத் தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வழக்கின் அடுத்தக் கட்டமாக சென்னை சுங்கத் துறையில் கண்காணிப்பாளர் ஒருவர் உள்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர்

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுங்கத் துறை கண்காணிப்பாளர் ஷிவ் காஷ்யப், மதிப்பீடு அலுவலர் நிதிஷ்குமார், ஊழியர் மணீஷ் ஆகியோரிடம் வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தினர். அதில், சென்னை துறைமுக சுங்கத் துறை கூடுதல் ஆணையரும் ஐஆர்எஸ் அதிகாரியுமான சதீஷ்குமாருக்கு பட்டாணி இறக்குமதி முறைகேட்டில் தொடர்பு இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து வருவாய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சதீஷ்குமாரிடம் நடத்திய விசாரணையில் பட்டாணி இறக்குமதி முறைகேடுக்கும், அவருக்கும் தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சதீஷ்குமாரை அதிகாரிகள் கைது செய்து செய்து விசாரித்து வருகின்றனர்.

அதோடு மசூர் பருப்பு என்று பச்சை பட்டாணி அடங்கிய 5 சரக்கு பெட்டகங்களையும் வருவாய் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 2 கோடி எனக் கூறப்படுகிறது. இந்த முறைகேட்டில் வேறு யாருக்கு தொடர்பு இருக்கிறது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

பச்சை பட்டாணி இறக்குமதி வழக்கில் கைது செய்யப்பட்ட கூடுதல் ஆணையர் சதீஷ் குமார் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் கூட்டுறவுத் துறை பணிபுரிந்து பணி ஓய்வு பெற்ற குணசேகரன் மகன் சதீஷ் குமார் என்பது குறிப்பிடத்தக்கது அவருக்கு பிப்ரவரி 27 காவல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மதுரை மாவட்ட செயற்குழு கூட்டம் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் அ.இளங்கோ தலைமை வகிக்க மாவட்டச் செயலாளர் எம்.சுரேஷ் வரவேற்புரையாற்றினார். ந.சண்முகசுந்தரம் மாவட்டத் துணைத் தலைவர் முன்னிலை வகித்தார். இறுதியாக மத்திய செயற்குழு உறுப்பினர் வே.சசிகுமார் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# தாம்பரம் மாநகர திமுக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்



குரோம்பேட்டை பிப்19

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர திமுக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் லட்சுமி ஆண்டாள் திருமண மண்டபத்தில் மாநகரக் கழக அவைத் தலைவரும் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ் தலைமையில் மாநகர கழக நிர்வாகிகள் இக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மார்ச் 1ல் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழாவை மாநிலம் முழுவதும் எழுச்சி உடன் கொண்டாடுவது குறித்தும் கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், மண்டல குழு தலைவர்கள் ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாநகர துணைச் செயலாளர்கள் நரேஷ் கண்ணா, பொன் சதாசிவம், விஜயரங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர் உடன் பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மாநகர அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# பரமக்குடியில் அரசு பேருந்து ஜப்தி செய்ய வந்த நீதிமன்ற ஊழியர்கள்-பயணிகள் கடும் வாக்குவாதம்

பரமக்குடி, பிப்19




ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி பேருந்து நிலையத்தில் அரசு பேருந்தை ஜப்தி செய்ய வந்த நீதிமன்ற ஊழியர்களுடன் பயணிகள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே கண்ணமங்கலத்தைச் சேர்ந்தவர் வினோத், 31,. இவர் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 7ஆம் தேதி தனது டுவீலரில் பரமக்குடியில் சென்று கொண்டிருந்தபோது அரசு பேருந்து மோதி தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதனை அடுத்து வினோத் பரமக்குடி நீதிமன்றத்தில் இழப்பீடு கேட்டு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் கடந்த 2023 ஆம் ஆண்டு மனுதாரருக்கு ரூபாய் 14 லட்சம் இழப்பீடு வழங்க நீதிமன்ற உத்தரவிட்டது. இரண்டு ஆண்டுகளாக நீதிமன்ற உத்தரவை பின்பற்றாமல் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் இழப்பீடு வழங்காமல் காலதாமதம் செய்துள்ளனர். இதனையடுத்து அரசு பேருந்தை ஜப்தி செய்ய பரமக்குடி சார்பு நீதிமன்ற நீதிபதி சதீஷ் உத்தரவிட்டார். இதனை அடுத்து பரமக்குடி பேருந்து நிலையத்தில் இருந்த பேருந்தை ஜப்தி செய்ய நீதிமன்ற ஊழியர்கள் வந்தனர். அப்போது பேருந்தில் அமர்ந்திருந்த பயணிகள் நீதிமன்ற ஊழியர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. ஜப்தி செய்யப்பட்ட பேருந்தில் இருந்த பயணிகள் மாற்று பேருந்தில் அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்தை ஏற்படுத்திவிட்டு இழப்பீடு வழங்காத அரசு பேருந்து ஜப்தி செய்யப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

# காளையார் கோவிலில் பன்றிக்கு வைக்கப்பட்டிருந்த மின்சாரக் கம்பியில் கால் பதித்த இளைஞர் பலி!

காளையார் கோவில் பிப்19



சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் மருதக் கண்மாய் சேர்ந்தவர் ஜெப மாலை ராஜ்(60) தனக்கு சொந்தமான 10, சென்ட் இடத்தில் கடலை செடி வைத் துள்ளார். அதில் இரவு நேரங் களில் பன்றிகள் மேய்வதால் பன்றிகளுக்காக வயலைச் சுற்றி கம்பிகளைக் கட்டி இரவு நேரங்களில் மட்டும் மின்சாரம் இணைத்துள்ளார். நேற்று காலை வயலுக்குச் சென்று பார்த்துவிட்டு தனது வயலில் 23 வயதுமதிக்கத்தக்க ஆண் தான் வைத்த மின்சாரக் கம்பியில் மிதித்து இறந்து கிடப்பதாக காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளார். காவல்துறை யினர் விசாரணையில் அந்த வழியாக முயல் பிடிக்க சென்ற ரஞ்சித் (23) என்பவர் முயல் பிடித்துவிட்டு கம்பியை தாண்ட முற்படும்போது மின்சாரம் காலில் பட்டதில் சம்பவ இடத்திலேயே மின்சாரம் பாய்ந்து இறந்துவிட்டார் என்பது தெரியவந்தது.

அவரது உடல் உடற்கூறு ஆய்விற்காக அரச மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப் பட்டது.சம்பவ இடத்தில் காவல் ஆய்வாளர் முத்துப்பாண்டி தலைமையில் காவல்துறை யினர் விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்...

# மதுரை மாவட்டத்தில் ரூ.314 கோடி மதிப்பீட்டில் டைடல் பூங்கா அமைப்பதற்கான கட்டுமான பணிகளுக்கு காணொலி காட்சி மூலம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்த முதல்வர்

மதுரை பிப் 19



தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்து காணொளி காட்சி வாயிலாக தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பாக, மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகே டைடல் பூங்கா அமைப்பதற்கான கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தாவணியில் ரூபாய் 314 கோடி மதிப்பீட்டில் 5.34 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் பன்னிரண்டு தளங்களுடன், மிஜி, மிஜிணிஷி, ஙிநிலிஷி, ஷிஜிகிஸிஜிஹிறிஷி போன்ற நிறுவனங்கள் இடம் பெறும் வகையில் புதிய டைடல் பூங்காவாக அமைக்கப்பட உள்ளது.

இதில் சுமார் 12,000 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்பு, குளிர்சாதன வசதிகள், 24ஙீ7 பாதுகாப்பு வசதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன. இதன் மூலம், மதுரை மாவட்டம் மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகே டைடல் பூங்கா அமைப்பதற்கான கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். தொடர்ந்து, மதுரையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் டைடல் பூங்கா பணிகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ. சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் மு.பூமிநாதன், மாநகராட்சி துணைமேயர் தி.நாகராஜன் , 33வதுவார்டு மாமன்ற உறுப்பினர் மாலதி ராஜேஷ் கண்ணன் டைடல் பூங்கா செயற்பொறியாளர் ஜெயமணி மௌலி , உதவி பொறியாளர் எம்.பாலகிருஷ்ணன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ரெட்டியார்சத்திரத்தில், இந்தியா-இஸ்ரேல் காய்கறி மகத்துவ மையத்தை ஆட்சியர் ஆய்வு

திண்டுக்கல், பிப்.19



திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில், இந்தியா இஸ்ரேல் காய்கறி மகத்துவ மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் .செ.சரவணன், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசு தோட்டக்கலை - மலைப்ப யிர்கள் துறையிலிருந்து இந்தோ இஸ்ரேல் வேளாண்மை திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட காய்கறி மகத்துவ மையம் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரத்தில் அமைந்துள்ளது. இம்மையத்தில் 1.4 ஹெக்டர் பரப்பில் தானியங்கி முறையில் நீர்பாசன வசதி கொண்ட உயர் தொழில்நுட்பபசுமைகுடில்கள், இயற்கை காற்றோட்டம் கொண்ட பசுமைகுடில்கள், பூச்சி புகா வலை கூடங்கள், மழை புகா வலை கூடங்கள் மற்றும் நிழல் வலை கூடங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட சூழலில் காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பாதுகாக்கபட்ட காய்கறி சாகுபடியின் மொத்த பரப்பளவு 1.1 ஹெக்டரில் இருந்து 16.2 ஹெக்டேராகவும், காய்கறிகளின் சராசரி உற்பத்தித்திறன் ஹெக்டேருக்கு 10.7 டன் என்ற அளவிலிருந்து 18.2 டன் அளவிற்கு மற்றும் காய்கறி பயிர்களின் உற்பத்தி 94,138 டன்களில் இருந்து 8,53,660 டன்களாகவும் உயர்ந்துள்ளது. இதுவரை இம்மையத்திலிருந்து சுமார் 49,000 விவசாயிகள் உட்பட சுமார் 67,000 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்மையத்தில் ஒரு தோட்டக்கலை பட்டயபடிப்பு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் ஒவ்வொரு ஆண்டும் 50 மாணவார்களுடன் செயல்பட்டு வருகிறது, என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, துணை இயக்குநர் (தோட்டக்கலைத் துறை) பெபின் இளம்பரிதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .மலர்வன், .மாரியப்பன், உதவிப்பொறியாளர்கள் ராஜேஷ்குமார், மகேந்திரன் உட்பட பலர் உடனிருந்தனர்.



வார விடுமுறையையொட்டி நீலகிரிக்கு அதிக அளவிலான சுற்றுலா பயணிகள் வருகை தந்த நிலையில், பேருந்துகள் மற்றும் கார்களில் பிளாஸ்டிக் பாட்டில்கள் உள்ளிட்ட பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதா என்பது குறித்து நீலகிரிமாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நேரில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது போலீசார் மற்றும் வருவாய்த்துறையினர் உடன் இருந்தனர்.

# வத்தலகுண்டு காந்திநகர் வராகி அம்மனின் தேய்பிறை பஞ்சமி சிறப்பு வழிபாடு

வத்தலகுண்டு பிப்.19



திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு காந்தி நகரில் அமைந்துள்ள வராகி அம்மனின். தேய்பிறை பஞ்சமியொட்டி சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன வத்தலகுண்டு காந்திநகர் வராகி அம்மனின் கோவிலில் உலக நன்மை வேண்டியும் மக்கள் சுபிட்சமாக வாழவு தேய்பிறை யாக பூஜை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் வத்தலக்குண்டு நிலக்கோட்டை பள்ளபட்டி திண்டுக்கல் பெரியகுளம் காற்றோடு தேவதானப்பட்டி போன்ற பல்வேறு ஊர்களில் இருந்து கலந்து கொண்டு அம்மனை வழிபட்டு சென்றனர்



தேனி மாவட்டம் போடி அரசு மருத்துவமனையில் தேனி நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் மருத்துவம் மற்றும் அமைச்சகத்தின் மூலம் புதிதாக கட்டுமானம் செய்யப்பட்ட ரத்த சுத்தகரிப்பு மையம் பொது மக்களின் பயன்பாட்டுக்காக திறந்து வைத்தனர் மருத்துமனை மேற்கொள்ளப்பட்ட வேண்டிய மேம்பாட்டு பணிகள் குறித்து தலைமை மருத்துவரிடம் கேட்டு அறிந்து அதற்கான பணிகள் நிறைவு படுத்தப்படும் என்றும் தெரிவித்தார். உடன் அரசு அதிகாரிகள் அரசு மருத்துவர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம் போடி நாயக்கனூர் குலாலர் பாளையம் பங்காருநாயக்கர் மேற்கு தெரு ஜ.கா.நி மெட்ரிக் பள்ளி எதிரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆறுபடையும் பக்த சபை முருகன் கோவில் தைப்பூச விழாவின் மறுபூஜை நேற்று நடைபெற்றது. சிறப்பு அபிஷேகமும், பூஜையும் நடைப்பெற்றது. மதியம் 12 மணிக்கு மேல் அன்னதானமும் சிறப்பாக நடைப்பெற்றது. போடிநாயக்கனூர் ஜமின்தார் . வடமலைராஜைய பாண்டின், அருள்மிகு பரமசிவன் கோவில் அறங்காவலர், போடிநாயக்கனூர் நகர் நலசங்கம் தலைவர் தலைமையிலும், . முருகேசன் அருள்செல்வி ஆகியோரின் முன்னிலையிலும் ஸ்ரீ ஆறுபடையோன் பக்த சபை முருகன் கோவில் தலைவர் முருகன், துணைத் தலைவர் காமாட்சி, செயலாளர் முருகவேல், சன்னாசி துணைச் செயலாளர், பொருளாளர் தங்கம் மற்றும் நிர்வாகஸ்தர்களும் ஸ்ரீ ஆறுபடையும் திருவாதிரை தங்கரத குழு பழனி பாதயாத்திரை போடி, பொதுமக்களும் ஆன்மீக அன்பர்களும் மறு பூஜையில் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

19.02.2025

# பாலமேட்டில் புதிய பள்ளிவாசல் திறப்பு! உலக நன்மைக்காக சிறப்பு வழிபாடு

அலங்காநல்லூர், பிப்.19

மதுரை மாவட்டம் பாலமேடு அல்மஸ்ஜிதுல் அக்ஸா சின்னத்வல் ஜமாஅத் புதிய பள்ளிவாசல் கட்டிட திறப்பு விழா நடைபெற்றது. இதற்கு பள்ளிவாசல் தலைவர் செய்யது முகமது தலைமை தாங்கினார். செயலாளர் முகமது ரபீக், சர்தார் நைனாமுகமது, துணை தலைவர் அப்துல் அஜீஸ், ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிர்வாக செயலாளர் சதக்கத்துல்லா வரவேற்று பேசினார்.

மதுரை மாவட்ட அரசு காஜி, அரபு கல்லூரி தலைவர் சபூர் முகைதீன் பள்ளிவாசலை திறந்து வைத்தார். எஸ்டிபிஐ கட்சியின் சோழவந்தான் தொகுதி தலைவர் அப்துல் ரகுமான் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார். தொடர்ந்து உலக மக்கள் நன்மைக்காக வேண்டியும், சமூக நல்லிணக்க கூட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.





பின்னர் சமபந்தி விருந்து வழங்கினர். முடிவில் பொருளாளர் அப்பாஸ் நன்றி கூறினார்.


# பழனி சுற்றுவட்டாரத்தில் சிசிடிவி கேமராவால் தொடர்ந்து குற்றச் சம்பவங்கள் குறைந்து வருகின்றன

பழனி பிப்19

திண்டுக்கல் மாவட்டம் பழனி அதை சுற்றியுள்ள வட்டாரங்களில் ரூபாய் 50 லட்சம் மதிப்பில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டது. முக்கியமான இடங்கள் பேருந்து நிலையம். வணிக வளாகங்கள் மருத்துவமனைகள் செல்லும் பாதைகள் கல்லூரி பள்ளிகள் மற்றும் பொதுமக்கள் அதிக நடமாட்டம் உள்ள பகுதியில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டன

இதனால் குற்ற சம்பவத்தில் ஈடுபடும் நபர்களை பழனி காவல் நிலையத்திலிருந்து சிசிடிவி கேமரா மூலம் அடையாளம் காணப்பட்டு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்து குற்றம் உறுதியானால் வழக்கு பதிவு செய்யப்பட்டு வருகின்றன அதனால் குற்ற சம்பவங்கள் ஈடுபடும் நபர்கள் குறைந்து வருகின்றனர்.



பழனி காவல் துணை கண்காணிப்பாளர் தனஜெயன் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்ட பின்னர் தற்பொழுது குற்ற சம்பவங்கள் குறைந்து வருகின்றன குற்றவாளிகள் குற்ற செயலில் ஈடுபடுபவர்கள் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டதால் குற்றத்தில் ஈடுபடுவதை குறைத்துள்ளனர்.

பொதுமக்களுக்கு அச்சுறுத்த வகையில் பொது இடங்களில் பைக் ரேஸர்களின் அட்டகாசம் குறைந்துள்ளது. பள்ளி கல்லூரி வளாகத்தின் வெளியே சந்தேகப் படி நிற்கும் நபர்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்து அனுப்பப்படுகின்றன பொதுமக்களும் சமூக ஆர்வலரும் கட்சி பிரமுகர்களும் பல முயற்சிகள் எடுத்து சிசிடிவி கேமரா பொருத்தப்படுவதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த காவல்துறைக்கு வாழ்த்துக்கள் கூறி வருகின்றனர்..

# பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை ஆய்வு செய்து நிறைவேற்றிய பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்



பல்லாவரம் பிப்19

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட 2வது மண்டலம் வார்டு எண் 21இல் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று காலை ஜெயலட்சுமி நகர், பெருமாள் நகர், ஏஜிஎஸ் நகர், திருத்தணி நகர் ஆகிய பகுதிகளில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளருமான இ.கருணாநிதி எம்எல்ஏ நேரில் சென்று பொதுமக்களின் பல்வேறு கோரிக்கைகளை ஆய்வு மேற்கொண்டார் உடன் மண்டல தலைவரும் பகுதி கழக செயலாளருமான இ.ஜோசப் அண்ணாதுரை மாமன்ற உறுப்பினர் கலைச்செல்வி வெங்கடேசன் வட்ட கழக செயலாளர் பி.வெங்கடேசன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜானகிராமன் மற்றும் குடியிருப்போர் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் பொதுமக்கள் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்..




மதுரை மாநகர் கே.புதூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட டி எம் நகரில் குடியிருக்கும் அபிராமி என்பவரிடம் கழுத்தில் அணிந்திருந்த 6 பவுன் தங்கச்செயினை கத்தியை காட்டி மிரட்டி வழிப்பறி செய்த வழக்கில் தீவிர புலன் விசாரணை செய்து தலைமறைவாக இருந்த சின்ன மங்கலகுடியை சேர்ந்த சுரேஷ்குமார் வயது 32 என்பவரை பிடிக்க முயற்சித்த போது தன்னை போலீஸ் தேடி வருவதை அறிந்து ஓட முயற்சித்தவரை மடக்கி பிடித்து எதிரியையும் நகைகளையும் மீட்ட புதூர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் செந்தில் பாண்டியன் ஆகியோரின் சிறப்பான செயல் பாராட்டி தமிழக காவல்துறை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் சங்கர் ஜிவால், நேரில் அழைத்து சான்றிதழ் மற்றும் பண வெகுமதி அளித்து பாராட்டினார்கள். காவல்துறை இயக்குநர் மற்றும் படைத்தலைவரிடம் பாராட்டு சான்றிதழ்கள் பெற்றவர்களை காவல் ஆணையர் லோகநாதன் வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டினார்.

# இளையான்குடி டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியில் போதை பொருட்களினால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு முகாம்

இளையான்குடி பிப்19

தேசிய ஆனைக்குழு மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு செயல்திட்டத்தின் படியும் சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் மாவட்ட முதன்மை நீதிபதி அறிவுரையின்படி சிவகங்கை மாவட்டம் இளையான்குடி டாக்டர் ஜாகிர் உசேன் கல்லூரியில் இளையான்குடி வட்டச் சட்டப் பணிகள் குழுவின் தலைவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி ஆன ஹரிராமகிருஷ்ணன் தலைமையில் போதைப் பொருள் தடுப்பு குறித்த சட்ட விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது.

போதை பொருட்களினால் மாணவர்களின் சீரழிவு பற்றியும் அதிலிருந்து வெளிவரும் செயல்முறைகள் பற்றியும் திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதியுமான




நிவாஸ் சிறப்புரையாற்றினார்.

மேலும் போதைப் பொருளினால் பெண்களும் பாதிக்கப்படும் விதம் பற்றி அதிலிருந்து தற்காத்துக் கொள்வது பற்றியும் சிவகங்கை மாவட்ட உரிமைகள் நீதிபதி தீப தர்ஷினி சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்ச்சியில் அரசு தலைமை மருத்துவர் செந்தில்ராஜ்குமார் வழக்கறிஞர் சங்க தலைவர் சிவகுமார் வழக்கறிஞர் பாலையா சமூக நலத்துறை நித்யா ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். முன்னதாக கல்லூரி முதல்வர் ஜபருல்லாகான் வரவேற்றார். மருத்துவ குழு மனநல ஆலோசகர் குறிஞ்சி மலர் தாமரைச்செல்வி சமூக ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் நாசர் சார்பு ஆய்வாளர் அழகு நிதி, காவலர் கண்ணாமணி ஆகியோர் கலந்து கொண்டனர். கல்லூரியின் துணை முதல்வர் முஸ்தாக் அகமது நன்றி கூறினார்.

முகாம் ஏற்பாடுகளை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு நாகேந்திரன் மற்றும் இளவரசன் ஆகியோர் செய்திருந்தனர்.

# தூத்துக்குடியில் விளையாட்டு மைதானம் பூங்கா, கனிமொழி எம்.பி. திறந்து வைத்தார் அமைச்சர், கலெக்டர், மேயர், ஆணையர் பங்கேற்பு

தூத்துக்குடி, பிப்.19.

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் கடந்த 3 ஆண்டு களாக பல்வேறு கட்டமைப்பு பணிகளை சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பயன்பெறும் வகையில் அனைத்து தரப்பினருக்கும் 60 வார்டு பகுதிகளிலும் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 16வது வார்டுக்கு உட்பட் பி அன்ட் டி காலனி 12வது தெருவில் புதிதாக மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட்டுள்ள விளை யாட்டு மைதானத்தை கனிமொழி எம்.பி. திறந்து வைத்து விளையாட்டு உப கரணப் பொருட்களை





வழங்கினார். விழாவில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன், கலெக்டர் இளம்பகவத், மேயர் ஜெகன் பெரியசாமி, ஆணையர் மதுபாலன், துணை மேயர் ஜெனிட்டா, இணை ஆணையர் சரவணக்குமார், உதவி ஆணையர்கள் சுரேஷ்குமார், பாலமுருகன், உதவி பொறியாளர் சரவணன், உதவி செயற்பொறியாளர்கள் ராமச்சந்திரன், முனீர் அகமது, இர்வின் ஜெபராஜ், நகராட்சி நகர்நல அலுவலர் அரவிந்த் ஜோதி, மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மண்டல தலைவர் அன்னலெட்சுமி, கவுன்சிலர்கள் கண்ணன், சந்திரபோஸ், இசக்கிராஜா, ராமர், பொன்னப்பன், ரவிச்சந்திரன், மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன்ஜேக்கப், வட்டச்செயலாளர்கள் பொன்பெருமாள், பொன்னுச்சாமி, மந்திரகுமார், மாவட்ட மருத்துவ அணித்தலைவர் அருண்குமார், பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாவட்ட விளையாட்டு அலுவலர் அந்தோணி அதிஷ்டராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# காளையார் கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட சாலைகள் நிலுவையில் கிடக்கும் அவலம்

சிவகங்கை, பிப்.19

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட சாத்தரசன் கோட்டை டு சூரணம் ஒய்ய வந்தான் பனங்காடி சாலை விரிவாக்க பணிசெய்ய முடியாமல் நிலுவையில் கிடக்கும் அவலம் சாலையை ஆக்கிரமித்து தனியார் மருத்துவர் வேலி அமைத்திருப்பதாக அப்பகுதி பொதுமக்கள் கூறிவருகிறார்கள்

இதனால் சாலை விரிவாக்க பணி செய்ய முடியாமல் ஒப்பந்தகாரர்கள் அவதிப்படும் அவல நிலை உள்ளது இது குறித்து மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுத்து சாலை பணி விரிவாக்க பணி உடனடியாக நடைபெற ஆவணம் செய்யுமாறு சமூக ஆர்வலர் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து தனியார் மருத்துவரிடம் கேட்ட பொழுது






தாங்கள் பட்டா அனைத்தும் முறையாக வைத்துள்ளோம் என்றும் அவர்கள் விளக்கம் அளித்தனர் அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் உடனடி ஆய்வு செய்து பொதுமக்கள் பயனுக்காக அந்த சாலை விரிவாக்க பணிக்கு ஆவண செய்து முறையாக அளந்து வழிவகை செய்ய வேண்டும் என்பதே அப்போது மக்களின் கோரிக்கையாக உள்ளது.

# தமிழகத்தில் வீடு- தெருக்களில் திரிவது உட்பட 15 லட்சத்திற்கும் மேற்பட்ட நாய்கள் நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வலியுறுத்தல்

சென்னை, பிப்.19

தமிழகத்தில் வீட்டில் வளர்ப்பது, தெருக்களில் திரிவது உட்பட 15 லட்சத்திற்கும் மேற்பட்ட நாய்கள் உள்ளன. வீடுகளில் வளர்க்கப்படும் நாய்களை முறையாக பராமரித்து, தடுப்பூசி போட்டு விடுகின்றனர்.

இந்த நாய்கள் மனிதர்களை கடித்தால் பெரிய பாதிப்பு இருக்காது. தெருக்களில் திரியும் நாய்கள் இறைச்சி கடைகளில் கிடைக்கும் கழிவுகளை சாப்பிட்டு அவற்றிற்கு தோல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நோய் தாக்குவதால் அவை வெறிபிடித்தவையாக மாறி விடுகின்றன. அவை கடிப்பதன் மூலம் 'ரேபிஸ்' நோய் பாதிப்பிற்கு உள்ளாகி பலர் பலியாகின்றனர். தமிழகத்தில் 2024 ஆண்டில் 4.80 லட்சம் பேரை நாய்கள் கடித்துள்ளன. இதில் பாதிக்கப்பட்டு ரேபிஸ் நோய் மற்றும் பிற பிரச்னைகளால் 37 பேர் வரை உயிரிழந்துள்ளனர். நாளுக்கு நாள் தெரு நாய்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவை கடிப்பதின் மூலம் 'ரேபிஸ்' நோய் பாதித்து உயிரிழப்போர் எண்ணிக்கையும் அதிகரிக்க துவங்கியுள்ளன. எனவே தமிழக அரசு இதற்கு நிரந்தர தீர்வு காணும் விதத்தில் மாவட்டந்தோறும் விலங்குகள் கருத்தடை மையம் அமைத்து நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும்.



விலங்குகள் கருத்தடை மையம் அவசியம்: கால் நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தெருக்களில் திரியும் நாய்களுக்கு வெறி பிடிக்காமல் இருக்க உரிய நேரத்திற்கு தடுப்பூசி செலுத்த வேண்டும். தடுப்பூசி செலுத்திய பின் அந்நாய்களை தனியாக 5 முதல் 6 நாட்கள் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும். இவற்றை உள்ளாட்சி அமைப்புகள் தான் செய்ய வேண்டும்.

விலங்குகள் நல வாரிய விதியின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 'விலங்குகள் கருத்தடை மையம்' திறக்கப் பட்டு, தெரு நாய்களுக்கு கருத்தடை செய்ய வேண்டும். ஒரு சில மாநகராட்சியில் மட்டுமே கருத்தடை மையம் செயல்படுகிறது. மற்ற மாவட்டங்களில் இல்லை. நாய்கள் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. இதை தவிர்க்க அரசு மாவட்டத்திற்கு ஒரு கருத்தடை மையம் ஏற்படுத்தி, உள்ளாட்சி அமைப்புகள் பிடித்து வரும் நாய்களுக்கு கருத்தடை செய்து, 6 நாட்கள் கண்காணித்து விட்டால் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படும் என்றார்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161